# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 09 SEPTEMBER-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# பள்ளத்தாக்கை சமமாக்குவார்

WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்தமாத இதழ் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது யோபு 42:2 என்ற வார்த்தையின்படி தேவன் எதைச்செய்ய நினைக்கிறாரோ அது ஒருநாளும் தடைபடாது.அவர் யாரைக் கொண்டு எதைச் செய்ய விரும்புகிறாரோ அதை கட்டாயம் செய்து விடுவார். கடந்த ஜுலை 18 முதல் 23 வரை நடைபெற்ற சுவிஷேசப் பயிற்சி முகாமை கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். கலந்து கொண்ட அத்தனை பேரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். புதிய பெலத்தோடு திரும்பிச் சென்றுள்ளனர். அதிலே தீர்க்கதரிசி.வின்சென்ட்செல்வக்குமார், அண்ணன் மோகன்சி.லாசரஸ், Dr.செல்வின் Pr.ஜான் கோவில்பிள்ளை, Pr.ராஜ சேகரன், வழக்கறிஞர் சாமித்துரை, தம்பி ஜான்வெஸ்லி அநேகர் கலந்து கொண்டு பயிற்சி கொடுத்தனர். வந்த அனைவரும் அங்கேயே தங்கி பயிற்சி எடுத்துக் கொண்டனர். கர்த்தர் அனைத்தையும் நேர்த்தியாய் செய்து முடித்தார். தேவனுக்குச் சித்தமானால் வருகிற அக்டோபர் 22 முதல் 27 வரை தீபாவளி விடுமுறையிலே ஏற்பாடு செய்துள்ளோம். அதில் வாஞ்சையுள்ள, ஊழிய தாகமுள்ள யாவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம். அதற்கு இப்பொழுதே நீங்கள் முன்பதிவு செய்ய வேண்டும். இல்லை என்றால் கலந்து கொள்ள முடியாது. தொடர்ந்து ஒவ்வொரு மாதம் இரண்டாவது சனிக்கிழமை செம்பட்டி வானத்தின் வாசலில் உபவாச ஜெபமும், அதைத் தொடர்ந்து மூன்றாவது சனிக்கிழமை மதுரையிலும் உபவாச ஜெபம் ஆரம்பித்துள்ளோம். நாம் இந்த மதுரை பட்டணத்தில் இருந்து கொண்டு சும்மா இருக்க முடியாது. கர்த்தருக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற பாரத்தோடு ஒழுங்கு செய்துள்ளோம். அதற்காக கருத்தாக ஜெபிக்கவும், நீங்கள் எந்த பகுதியில் இருந்தாலும் இணைந்து ஜெபிக்க உங்களை அழைக்கிறோம். தொடர்ந்து திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9 மணிக்கு நடைபெறுகிற 'கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்' நிகழ்ச்சிக்காகவும் ஜெபியுங்கள். ஊழியம் வளரும் போது தேவைகளும் அதிகமாக பெருகுகின்றது. நம்முடைய ஊழியத்தின் தேவைகளுக்காகவும், பொருளாதாரத் தேவை சந்திக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தருடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.

அன்புடன் உங்கள் சகோதரர்

L. Vincentraj

[சகோ. L.வின்சென்ட்ராஜ்]





# பள்ளத்தாக்கை சமமாக்குவார்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண்டவராகிய தேவன் சொல்லுகிறார் பள்ளங்கள் எல்லாம் உயர்த்தப்படும், சகல மலைகள், குன்றுகள் தாழ்த்தப்படும், சமபூமியாகும் கோணலானவைகள் செவ்வையாகும் கரடானவைகள் சமமாகும். ஏற்றத் தாழ்வுகள் இனி இல்லை என்றார். என்ன ஒரு அருமையான தேவ வார்த்தை ஆம் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் ஆம் என்றே இருக்கிறது. இந்த வார்த்தையை வாசிக்கிறவனும் கேட்கிறவனும் இதை தியானிக்கிறவர்களும் இதன்படி நடக்க தன்னை அர்ப்பணிக்கிறவர்களும் பாக்கியவான்கள், மேலானவர்கள். ஒரு நடந்த சம்பவத்தை ஒரு புஸ்தகத்தில் வாசித்தேன். ஒரு தேசத்தில் ஒரு அழகிய பூங்கா ஒன்றை அமைத்து அதை ஜனங்கள் கண்டு களிகூருவதற்காக ராஜா அந்த பூங்காவை ஏற்படுத்தினார். அதை பராமரிக்க சிலரை ஏற்படுத்தி அதற்காக பணங்களையும் வாரி வழங்கினார். பல மாதங்கள் கடந்த பின்பு ஒரு நாள் அந்த ராஜாவுக்கு அந்த தோட்டத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது. அவர் தன் மந்திரிமார்களோடு புறப்பட்டு வந்தார். அதை பராமரிக்க ஏற்படுத்தப்பட்டவர்களே அதை பராமரிக்காமல், பாதுகாக்காமல் குப்பைகளாக, புதர்களாக விட்டு விட்டார்கள். ராஜாவுக்கு இருக்கிற வேளையில் இங்கு எங்கு வரப்போகிறார் என்று தங்கள் சொந்த காரியங்களில், வேலைகளில் ஈடுபட்டார்கள். திடிரென ராஜா வந்து பார்த்தார் மலை போல குப்பைகளும் மாட்டுச் சானங்களும் குவிந்து கிடந்தன. அந்த தோட்டம் நறுமணம் வீசுவதற்குப் பதிலாக துர்நாற்றம் வீசியது. அந்த ராஜாவுக்கு மிகுந்த கோபம் வந்தது. இப்படி தோட்டத்தைக் கெடுத்து விட்டீர்களே, மட்டுமல்ல இந்த குப்பைகளை எல்லாம் இங்கு கொட்டி மலையைப் போல குவித்து விட்டீர்களே என் பணத்திற்கும்,என் சம்பளத்திற்கும் நீங்கள் கணக்கு சொல்ல வேண்டும். ஒரு மாதம் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் என் விருப்பப்படி அழகிய தோட்டமாகவும் நறுமணம் பரவும் இடமாகவும் மாற்ற வேண்டும் இல்லை என்றால் என் கோபத்திற்கு உள்ளாகி தண்டிக்கப்படுவீர்கள், சிறைச்சாலையில் போடப்படுவீர்கள் என்று எச்சரித்து ஒரு வாய்ப்புக் கொடுத்து, தருணம் கொடுத்து சென்று விட்டார். அதை பராமரிக்க ஏற்படுத்தப்பட்டவர்கள் எல்லாரும் நடுங்கி திகைத்து என்ன செய்வதென்று தெரியாமல் பயந்து நடுங்கினார்கள். அப்படிப்பட்ட வேளையில் தான் அந்த தோட்டத்தின் அருகே அருமையான ஒரு ஆறு, நீரூற்று ஓடிக்கொண்டிருந்தது. திடீரென அவர்கள் எல்லாருக்கும் ஓர் ஞான உதயம் வந்தது. இந்த நீருற்றை, ஆற்றை இந்த தோட்டத்திற்குள் திருப்பி விட்டால் என்ன. இது இங்கே பாய்ந்தால் செழிப்பாகுமே, மட்டுமல்ல உயரமான குன்றுகளைப் போல் குவிந்து கிடக்கிற இந்த குப்பைகள் கறைந்து ஓடி சுத்தமாகுமே என்று ஆலோசனைப் பண்ணி அப்படியே எல்லாரும் சேர்ந்து தண்ணீரை தோட்டத்திற்குள் திருப்பி விட்டார்கள். அந்த தண்ணீர் பாய பாய அந்த இடம் சுத்தமாகி, தூய்மையாகி, குப்பைகள், மலை போல் குவிந்த எல்லாம் தண்ணீரினால் அடிக்கப்பட்டு சமபூமியாகி ராஜா விரும்பியபடி அழகிய தோட்டமாக மாறியது. அசுத்தமான அந்த இடம் நறுமணமுள்ள சுகந்த வாசனையாக மாறியது. அடுத்த மாதம் ராஜா சொன்னபடியே அந்த இடத்தை பார்வையிட வந்தார். அவருக்கு மிகுந்த ஆச்சரியம் இதை எப்படி இவ்வளவு சீக்கிரத்தில் அழகான தோட்டமாக மாற்றினீர்கள். இது எப்படி நடந்தது என்று ஆச்சரியத்தோடு கேட்டார். அப்போது தான் நடந்ததை ஆற்றில் ஓடிக்கொண்டிருந்த

அந்த நீரூற்றை திருப்பி சரி செய்து அழகிய தோட்டமாக உருவாக்கி நறுமணம் வீசும் இடமாக மாற்றியதைச் சொன்னார்கள். எனக்கு அருமையானவர்களே நம்முடைய ராஜாவும், ஆண்டவராகிய இயேசுவும் நம்மிடத்தில் இதைத்தான், இப்படித்தான் எதிர்ப்பார்க்கிறார். நமக்குள் எங்கேயே ஓர் இடத்தில் ஒரு பள்ளம் விழுந்து விட்டது. மற்றொரு பக்கம் மலைகுன்று போல குப்பைகளும், அழுக்குகளும் சேர்ந்து விட்டது. நம்முடைய வாழ்க்கையை கெடுத்து எந்த முன்னேற்றமும் இல்லாமல் தடையாக சில காரியங்கள் நமக்குள் இருக்கிறது. அதை சரி செய்து சமமாக்க தேவன் விரும்புகிறார். நீங்கள் பள்ளமாகவும் அல்ல, குன்றுகளும், மலைகளுமாக அல்ல சமபூமியாக, சமாதானமாக இருங்கள் என்று சொல்லுகிறார். வேதத்தை வாசித்துப் பாருங்கள் 2 ராஜா 3:16.17-ல் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் இந்தப் பள்ளத்தாக்கிலே எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள் மழையையும் காணமாட்டீர்கள் ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடு மாடுகளும் உங்கள் மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு இந்தப் பள்ளத்தாக்குத் தண்ணீரால் நிரப்பப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லப்பட்டுள்ளது இதை நம்புகிறவர்கள் பாக்கியவான்கள். உங்களுக்கும் அப்படியே நடக்கும். வாய்க்கால்களை வெட்டுங்கள் தேவன் உங்களுக்குள் வருவதற்கும், உங்களை ஆசீர்வதிப்பதற்கும் வழியை ஏற்படுத்தி கொடுங்கள். அப்பொழுது பள்ளங்கள் எல்லாம் நிரப்பப்படும், குன்றுகள் எல்லாம் நிறைவாகும். நீங்கள் சமபூமியாய் உயர்த்தப்படுவீர்கள். நீங்கள் உயர்த்தப்பட வேண்டும் என்றால் இப்பொழுது இருக்கின்ற நிலையில் இருந்தால், மலைகள், குன்றுகள் போல அகந்தையாக, பெருமையாக, அசுத்தமாக இருந்தால் தேவன் உங்களை ஆசீர்வதிக்க முடியாது. உங்களைத் தாழ்த்தி பணிந்து, தேவனுக்கு முன்பாக உங்கள் வழிகளை சரி செய்ய வேண்டும். நீங்கள் தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி உங்களை சரி செய்யாவிட்டால் அவர் உங்களை தாழ்த்த வேண்டியதாய் இருக்கும். சரி செய்து தடைகளை நீக்க வேண்டியதாய் இருக்கும். யாத் 10:3-ஐ வாசித்துப் பாருங்கள் மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் வந்து உன்னைத் தாழ்த்த நீ எதுவரைக்கும் மனதில்லாதிருப்பாய் என்றார்கள். ஏனென்றால் தேவன் வாக்களித்த கானான் தேசத்திற்கு போக பார்வோன் ஒரு மலையைப் போல், குன்றுகளைப் போல் இஸ்ரவேல் ஜனங்களைத் தடுத்துக் கொண்டிருந்தான். அவன் தன்னை தாழ்த்தாதபடியினால் இருதயம் கடினமாகி, தேவனுக்கு விரோதமாய் இருந்தபடியால் தேவன் பார்வோனை தரைமட்டமாக்கினார். செங்கடலில் அவன் சேனையை மூழ்கடித்தார். வேதம் சொல்லுகிறது சங் 50:23-ல் தன் வழியைச் செவ்வைப்படுத்துகிறவனுக்கு தேவனுடைய இரட்சிப்பை வெளிப்படுத்துவேன் என்று கர்த்தராகிய தேவன் சொல்லுகிறார். இனி நாம் நம்முடைய சுபாவத்தில், குணத்தில் நம் வாழ்க்கையில் குன்றுகளைப் போல, மலைகளைப் போல அகந்தையாக,மேட்டிமையாக பிறரை மதிக்காமல், நேசிக்காமல் வெறுத்து, பகைத்து தாறுமாறாய் வாழ்ந்தால் தேவன் சும்மா விடமாட்டார். தம்முடைய நாமம் தூஷிக்க விடமாட்டார். நம்மை சரி செய்ய விரும்புகிறார். கோணலானவைகள் செவ்வையாகவும், கரடானவைகள், முரட்டு குணங்கள், சுபாவங்கள் மென்மையாக மாற வேண்டும். அப்படி உங்கள் வழிகளைச் செவ்வையாக்கி சரி செய்தால் ஆண்டவராகிய தேவன் சொல்லுகிறார் ஏசா 41:15-ல் இதோ போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன். நீ மலைகளை மிதித்து நொறுக்கி குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கி விடுவாய் என்றார். நீ குன்றுகளையும் மலைகளையும் மிதித்து நொறுக்கி அவைகளை சமபூமியாக்க உன்னை புதிய யந்திரமாக, கூர்மையான ஆயுதமாக மழுங்கி போன, செயல் இழந்த உன் வாழ்க்கையை உயிருள்ளதாக மாற்றவும், உன் பள்ளங்களை எல்லாம் சமமாக்கவும், உன் பள்ளங்களை எல்லாம் நிரப்பவும் ஆண்டவர் இந்த நாட்களை உனக்கு ஈவாக, கிருபையாக கூட்டிக் கொடுத்திருக்கிறார். இது உன்னுடைய நாள், உன்னுடைய நேரம்,உன்னுடையது நிரப்பப்படவும் மேன்மை அடையவும் கர்த்தர் உனக்கு கிருபை பாராட்டி இருக்கிறார். போகட்டும் எப்படி நம்மை நிரப்புகிறார், எந்தெந்தப் பள்ளங்களை நிரப்புகிறார் என்பதைப் பார்ப்போம்.

## அழுகையின் பள்ளத்தாக்கை மாற்றுகிறார்

அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள், மழையும் குளங்களை நிரப்பும். சங் 84:6. பள்ளங்கள் எல்லாம் நிரப்பப்படும், சமபூமியாகும் என்ற ஆண்டவராகிய தேவன் எந்தெந்தப் பள்ளங்களை நிரப்புகிறார் என்பதைப் பார்ப்போம். முதலாவது அழுகையின் பள்ளத்தாக்கை மாற்றுகிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு காலமுண்டு சிரிக்க ஒருகாலமுண்டு, அழுவதற்கு ஒரு காலமுண்டு. ஆதியாகமம் 37 முதல் 43 வரை அதிகாரங்களை வாசித்துப் பார்த்தால் யோசேப்பு என்ற நீதிமான் தன் சொந்த சகோதர்களால் பகைக்கப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, பொய்குற்றம் சுமத்தப்பட்டு தன் குடும்பத்தை விட்டு பிரிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டான். ஏறக்குறைய 18 வருஷங்கள் அவன் அழுகையின் பள்ளத்தாக்கிலே கடந்து போனான். இனி பிழைப்போம், தன் சொந்த தேசத்திற்கு திரும்புவோம், தன் தகப்பனைப் பார்ப்போம் என்ற

வாய்ப்பே அவனுக்கு இல்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் அவன் அழுகையை தேவன் ஆனந்தக் களிப்பாய் மாற்றினார். எரே 31:9-ல் அழுகையோடும் விண்ணப்பங்களோடும் வருவார்கள் அவர்களை வழி நடத்துவேன்.அவர்களைத் தண்ணீருள்ள நதிகளண்டைக்கும், இடறாத செம்மையான வழியிலே நடக்கப் பண்ணுவேன் என்றவர் அவன் அழுகையை ஆனந்தக் களிப்பாய் மாற்றி எந்த தேசத்தில் கண்ணீர் வடித்தாரோ அந்த தேசத்தில் அவரை உயர்த்தி கனம் பண்ணி, கண்ணீர் வடித்த நாட்களுக்கும் வேதனைப்பட்ட காலங்களுக்கும் சரியாய் உயர்த்தினார். உன் துக்க நாட்கள் முடிந்து போகும் என்றவர் அவன் கடந்து போன கண்ணீரின், அழுகையின் பள்ளத்தாக்கை மாற்றினார். அன்னாள் என்ற ஒரு பெண்ணணைப் பாருங்கள் பல வருஷம் பிள்ளையில்லாததினால் மணமடிவாக்கப்பட்டாள். யாரால் 1 சாமு 1:6-ல் கர்த்தர் அவள் கர்ப்பத்தை அடைத்தபடியினால் அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள். இதின் நிமித்தம் அவள் ஆலயத்தில் போய் மனம் கசந்து அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி அழுதாள் தேவன் அவளை கைவிட்டாரா? சங்கீதம் 6:8 சொல்லுகிறது அக்கிரமக்காரரே நீங்கள் எல்லாரும் என்னை விட்டு அகன்று போங்கள், கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார் என்றார். ஆண்டவராகிய தேவன் அவளுக்கு கிருபையாய் இறங்கி இஸ்ரவேலின் மிகப் பெரிய தீர்க்கதரிசியை பெற்றெடுக்க கிருபை செய்தார். அவள் அழுகையின் பள்ளத்தாக்கை மாற்றினார்.பக்தனாகிய தாவீதின் வாழ்க்கையைப் பாருங்கள் 1 சாமு30:4-ல் அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனங்களும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமல் போகுமட்டும் சத்தமிட்டு அழுதார்கள். காரணம் அவ்வளவு பிரச்சனை, அவ்வளவு போராட்டம். கடைசியாக தன் மனைவி, பிள்ளைகள் எதிரிகளால் கடத்தப்பட்டு விட்டார்கள். இனி உயிரோடு வருவார்களா? அவர்களை மீட்க முடியுமா என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. அவர் கண்ணீரின் பள்ளத்தாக்கை உருவ நடந்து எல்லாராலும் கைவிடப்பட்டு, மறக்கப்பட்டது மட்டுமல்ல சங் 23:4-ன்படி நான் மரணஇருளின் பள்ளத்தாக்கில் நடக்கிறேன். பல வேளைகளில் மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரம் தான். என்னால் நன்மையைப் பெற்றவர்கள், என்னால் பாதுகாக்கப்பட்டவர்கள் இப்பொழுது எனக்கு விரோதியாகி, பகைத்து என்னை வீட்டை விட்டே துரத்தி காடுகளிலும், மலைகளிலும் சாப்பாடு இல்லாமல், உறக்கம் இல்லாமல், தங்க இடமில்லாமல் கொடிய மிருகங்களோடு போராட வைக்கிறார்களே என்று அழுகிறதற்குப் பெலன் இல்லாமல் போகும் மட்டும் அழுதார்கள். சங் 56:8-ல் என் அலைச்சல்களை தேவரீர் எண்ணியிருக்கிறீர், என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும், அவைகள் உம்முடைய கணக்கில் வருவதாக எனக்கு யார் உண்டு என்று கதறினார். தேவன் தாவீதுக்கு இறங்கினார், எந்த இடத்தில் கண்ணீர் வடித்தாரோ, எந்த இடத்தில் அழுதாரோ அதே இடத்தில் அவரை உயர்த்தி, சத்துருக்களுக்கு முன்பாக அவர் தலையை உயர்த்தி பந்தியை ஆயத்தப்படுத்தி எதிரிகளைக் காணமலே போகப் பண்ணினார். ஆகவே தான் அவர் சொல்லுகிறார் அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதையே அவர்கள் நீரூற்றாக்கிக் கொள்ளுகிறார்கள் என்றார். என் அன்பு சகோதர, சகோதரிகளே இதுவரை எந்தெந்த காரியங்களுக்கு எல்லாம் கண்ணிர் வடித்தாயோ, அவமானப்பட்டாயோ, எதிரிகளால் பரியாசம் பண்ணப்பட்டாயோ அந்தந்த காரியங்களில் தேவன் உனக்கு ஒரு உயர்வைத் தரப்போகிறார், பள்ளத்தாக்கை சமமாக்கப் போகிறார். உயர்த்தப் போகிறார். இனி உனக்கு முன்பாக இருக்கின்ற மலைகளும், குன்றுகளும் தரைமட்டமாக்கப்படும். இனி விரோதிப்பவனும் இல்லை, இடையூறு செய்கிறவனும் இல்லை என்ற அளவுக்கு கர்த்தர் உன்னை உயர்த்தப் போகிறார். பள்ளங்கள் எல்லாம் பரிசுத்த ஆவியால் நிரம்பிட வேண்டும். மலைகள், குன்றுகள் சமபூமியாகும் என்ற தேவனுடைய வார்த்தையின்படி உங்கள் வாழ்க்கையில் உள்ள எல்லா பள்ளத்தாக்கையும் சமமாக்கி உங்களை ஆசீர்வதிப்பாராக.



## எலும்புகளின் பள்ளத்தாக்கு

கர்த்தருடைய கை என்மேல் அமர்ந்து கர்த்தர் என்னை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டு போய் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தினார் எசே 37:1. அடுத்ததாக எலும்புகளின் பள்ளத்தாக்கை தேவன் நிரப்புவார். நம்முடைய பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் கல்லறைத் தோட்டம், சுடுகாடு இப்படிப்பட்ட ஒரு பள்ளத்தாக்கில் எசேக்கியேல் என்ற தீர்க்கதரிசியை தேவன் கொண்டு சென்றார். எதற்காக நீயும் ஒரு நாள் இங்கு வரப்போகிறாய் என்பதற்காக அல்ல. இங்கு இருந்து தான் என்னுடைய வல்லமையை வெளிப்படுத்தி மாபெரும் ஒரு சேனையை கர்த்தருக்காக எழும்பச்

செய்யப் போகிறேன் என்று அவருக்கு காண்பிப்பதற்காக தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியை எலும்புகளின் பள்ளத்தாக்கிற்கு கொண்டு சென்றார். இங்கிலாந்து தேசத்தில் ஜான்வெஸ்லி என்ற ஒரு தேவ ஊழியரை கர்த்தர் எழுப்பினார். கர்த்தர் அவர் கூட இருந்து செய்த காரியம் பயங்கரமாய் இருந்தது. பலத்த அற்புதங்கள் அவர் மூலமாய் நடந்தது. மரித்த அநேகரை அவர் உயிரோடு எழுப்பினார். அவர் மூலமாக உலகமே அசைக்கப்பட்டது. கர்த்தர் அவரை பரிசுத்த ஆவியால் நிரப்பிய போது அவர் சென்ற ஆலயத்தில் பிரசங்கம் செய்யும்படி வாய்ப்புக் கேட்டார். அந்த ஆலய நிர்வாகத்தினரோ அவரை ஏற்றுக் கொள்ளவும் இல்லை, வாய்ப்பும் அளிக்கவில்லை. அவர் சோர்ந்து போகாமல் ஒரு கல்லறைத் தோட்டத்தில் சென்று தன்னுடைய பிரசங்கத்தை, ஊழியத்தை ஆரம்பித்தார். அப்படி பண்ணிய பிரசங்கத்தில் தான் கணக்கற்ற மககள் தொடப்பட்டு இயேசுவை ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை, எழுப்புதலை பெற்றுக் கொண்டார்கள். அதன் பிறகு கர்த்தர் அவரை உலகம் முழுவதும் மகிமையாய், வல்லமையாய் பயன்படுத்தினார். இன்றைக்கு வசதி வாய்ப்பு இருந்தால் தான் ஊழியம் என்ற நிலை வந்துவிட்டது. ஆனால் தேவன் எசேக்கியேல் தீர்க்கதரிசியை எலும்புகளின் பள்ளத்தாக்கில் நடத்தி இந்த எலும்புகள் முதலில் ஒன்று சேருமா? அந்தந்த எலும்புகள் சரியாய் மற்றவைகளோடு இணைக்கப்படுமா? நரம்புகள், சதைகள் உண்டாகுமா?உயிரடையுமா? என்று ஆண்டவராகிய தேவன் தீர்க்கதரிசியைப் பார்த்து கேட்டார். ஒரு வேளை நாம் அந்த இடத்தில் இருந்திருந்தால், நம்மைப் பார்த்து கேட்டால் நிச்சயமாய் அவரைப் பார்த்து நடக்காது, முடியாது என்று சொல்லியிருப்போம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் எசேக்கியேல் தீர்க்கதரிசியைப் பார்த்து தேவரீர் நீர் அதை அறிவீர் என்று சொல்லச் சொன்னார். ஆண்டவராகிய தேவன் சொன்னார் இப்பொழுது இந்த எலும்புகளை உயிரடையச் செய்கிற வல்லமையுள்ள வார்த்தை உன்னிடத்தில் இருக்கிறது. நீ பரிசுத்த ஆவியானவருக்கு கட்டளையிட்டு, ஆவியானவரே நான்கு திசைகளிலுமிருந்து புறப்பட்டு வந்து இந்த எலும்புகளின் மேல் இறங்குவராக என்றார். அவர் அப்படி பரிசுத்த ஆவியில் நிறைந்து தீர்க்கதரிசனம் சொல்லும் போது இந்த உலர்ந்த எலும்புகளில் அசைவு உண்டாயிற்று. அதன் பிறகு உயிரடைந்து காலுன்றி மாகப்பெரிய சேனையாய் எழும்பி நின்றார்கள்.இன்றைக்கு தேவனுடைய பிள்ளைகளும், தேவனுடைய சபைகளும் உலர்ந்த எலும்புகளாய், சதையில்லாமல், நரம்பு இல்லாமல், உயிர் இல்லாமல், அசைவு இல்லாமல் உலர்ந்து போய், பட்டுப்போய், ஒருமனம் இல்லாமல் உயிரற்ற நிலையில் இருக்கிறார்கள். தங்களுக்கு ஏற்பட்ட பாடுகள், வேதனைகள், இழப்புகள், நஷ்டங்கள், நம்பிக்கைதுரோகங்கள், நமக்கு அன்பானவர்களை இழந்து உலர்ந்து போன எலும்புகளாய், உயிரற்ற வாழ்க்கையாய், அசைவற்று, உற்சாகமிழந்து காணப்படுகிறோம்ஒரு கல்லறைத் தோட்ட வாழ்க்கையைப் போல் காணப்படுகிறோம். ஆனால் அப்படியே போகட்டும், கிடக்கட்டும் என்று நம்மை விடவில்லை. இந்த உலர்ந்த எலும்புகள், இந்த அசைவற்ற ஜெப ஜீவியம், இந்த உற்சாகமில்லாத ஊழியம் இனி உயிரடையும் எப்போது நீங்கள் எனக்காக காத்திருந்து ஜெபிக்கின்ற போது நான் உங்களுக்கு அருளும் என்னுடைய தீர்க்கதரிசன வார்த்தையினால் நீங்கள் உயிரடைவீர்கள். நாம் நம்முடைய தேவைகளுக்காக அல்ல நம்முடைய எதிர்பார்ப்புகளுக்காக அல்ல கர்த்தருக்காக காத்திருக்கும் போது தான் கர்த்தர் அவருடைய வார்த்தையின் மூலமாக நம்மோடு பேசுகிறார். அதில் உண்டாகிற பெலன் தான் நம்மை உயிரடைய செய்கிறது. நம்மை தேவனோடு ஒன்று சேரச் செய்கிறது. இனிவரும் நாட்களில் தேவன் தம்முடைய பிள்ளைகளை, தம்முடைய சபையை பெலனடையச் செய்ய போகிறார். எலும்புகளின் பள்ளத்தாக்கை ஆலயமாக சபையாக மாற்றப் போகிறார். தீர்க்கதரிசனம் உரைக்கிற, இந்தியாவை அசைக்கிற வல்லமையை வெளிப்படுத்துகிற ஊழியங்களை, ஊழியர்களை எழுப்பப்போகிறார். இயேசு சொன்னார் யோவான் 5:25-ல் அந்நாளில் மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும் அது இப்பொழுதே வந்திருக்கிறது அதை கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்றார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அருமையான சகோதரனே, சகோதரியே எலும்புகளின் பள்ளத்தாக்கில் கிடக்கிறாயா என்னை தூக்கிவிட, எழுப்பிவிட, இதிலிருந்து வெளியே கொண்டுவர ஒருவருமில்லை என்று அங்கலாய்க்கிறாயா? இன்றைக்கு உன்னை தூக்கி எடுக்க, உன்னை வெளியே கொண்டுவர, நீங்கள் உயிரடைய மகா சேனையாய் எழும்ப கர்த்தர் எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கிலிருந்து வெளியே கொண்டு வரப்போகிறார். நீ எழுந்திருக்க முடியாதபடிக்கு குன்றுகளும், மலைகளும் சூழ்ந்திருக்கிற அந்த தடைகளை மாற்றி, நொருக்கின அலைகளின் தலையை தட்டி இதற்கு மேல் வராதே என்று உன்னை உயரமான இடத்திற்கு கொண்டு செல்லப் போகிறார். உன் பள்ளங்கள் நிரப்பப்படும், உன் பள்ளங்கள் சமநிலைப்படுத்தப்படும். உன் வாய்க்கால்களில் தண்ணீர் ஓடும் நீங்கள் காற்றையும் காண மாட்டீர்கள் மழையையும் காணமாட்டீர்கள் ஆனால் உங்களுக்கு அற்புதம் நடக்கும். ஒன்றும் இல்லை என்று எண்ணப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாக தேவன் உங்களை மாற்றுவார். நீங்கள் உங்களுக்காக அல்ல தேவனுக்காக மகாபெரிய சேனையாய் எழும்புவீர்களாக கர்த்தர் இந்த உலர்ந்த எலும்புகளை கொண்டு மகிமையான காரியங்களைச் செய்வாராக, அது உங்களுக்கு மேன்மையாக இருப்பதாக. உங்கள் பள்ளங்களை எல்லாம் தேவன் நிரப்பி உங்களுக்கு முன்பாக இருக்கின்ற குன்றுகளையும், மலைகளையும் சமபூமியாக்குவாராக!

# எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்கிற கர்த்தர்



சகோதரி. கலா வின்செண்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு வாழ்த்துக்கள். என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன். 1 ராஜா 1:30. தாவீது ராஜா பத்சேபாளுக்கு ஆணையிட்டுக் கொடுத்தபடியே மகன் சாலமோனை ராஜாவாக ஏற்படுத்துவேன் என்று சொல்லி என் ஆத்துமாவை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தர் என்கிறார். தாவீது சந்தித்த இக்கட்டுகள் ஏராளம். சிறியவனாய் இருக்கும்போது வனாந்திரத்துக்கு தாய் தந்தையாலேயே அனுப்பி வைக்கப்பட்டவன். என் வாழ்க்கையே இவ்வளவு தானா? இந்த காட்டிலேயே முடிந்து போகப்போகிறதா? நன்மையின் நாட்களை நான் காண்பேனா? பலவிதமான கேள்விகள் அவனில் எழும்பும் போதெல்லாம் கர்த்தர் என் மேய்ப்பர் நான் தாழ்ச்சியடையேன் என்று சொல்வான். சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும் என்பான். சங் 116:3-ல் மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது, பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது.. இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன் என்று சொல்லுகிறான். நம் வாழ்க்கையில் கூட தாவீதைப் போல பல இக்கட்டுகளை சந்தித்துக் கொண்டு இருக்கலாம், தாவீதை எல்லா இக்கட்டுக்கும் நீங்கலாக்கி மீட்ட கர்த்தர் நம்மையும் விடுவிப்பார். காட்டிலிருந்து நாட்டிற்கு கொண்டு வருகிற மாதிரி இருக்கும். ஆனாலும் திரும்பவும் வனாந்திர வாழ்க்கை வழியாக கடந்து போனான். ஒருமுறை இரண்டு முறை அல்ல, பலமுறை அவன் அனாதை போல வனாந்திரத்தில் அலைந்தான். சொந்தங்களால் வந்த இக்கட்டுக்கள், மாமன் சவுல், மகன் அப்சலோம், பெலிஸ்தியரால் வந்த இக்கட்டுகள், எத்தனை நாட்டவர்களோடு யுத்தம், கொஞ்சம் நிம்மதியாய் இருப்போம் என்று நினைத்தான், ஆனால் ஆத்துமாவை மரணத்துக்குள்ளாக்கும் விபச்சாரத்தில் விழுந்தான் பாவ போராட்டம். அவன் வாழ்க்கையில் ஜனங்களை எண்ணி தொகை பார்த்து அதில் ஒரு பெருமை, எவ்வளவு பேர் இருக்காங்க என்று அதில் ஒரு போராட்டம் இது சாத்தானின் தூண்டுதலால் வந்தது. அத்தனை போராட்டங்களில் இருந்தும் கர்த்தரே என்னை நீங்கலாக்கி விடுவித்து காத்தார் என்கிறான். 2 சாமு 24:14-ல் கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன், இப்பொழுது நாம் கர்த்தருடைய கைகளில் விழுவோமாக அவருடைய இரக்கங்கள் மகா பெரியது. மனுஷர் கையில் விழாதிருப்பேனாக என்றான். கொடிய இடுக்கண் வந்த போது தாவீது கர்த்தரின் கையிலேயே விழுந்தான். நீங்கபாத்து ஏதாவது செய்யுங்க என்றான், மூன்று தண்டனையில் எதை தெர்ந்தெடுப்பது தெரியவில்லை. ஏழு வருஷம் பஞ்சம் வேணுமா?, மூன்று நாள் கொள்ளை நோய் வேணுமா?, மூன்று மாதம் எதிரிகளால் துரத்தப்பட வேணுமா? என்று தீர்க்கதரிசியின் மூலம் தேவன் சொல்லி அனுப்பினார். ஏழு வருஷம், மூன்று மாதம், மூன்று நாள் என்று இருக்கிறதிலேயே சின்ன தண்டனை கொடுத்து சீர்படுத்தினார். 17-ஆம் வசனத்தில் இதோ, நான்தான் பாவஞ்செய்தேன், நான் தான் அக்கிரமம் பண்ணினேன், இந்த ஆடுகள் என்ன செய்தது என்று மனம் வருந்தி தன்னைத் தாழ்த்தினதும் தேவ கோபம் விலகிப்போனது. அந்த தேவன் நமக்கும் ஜெயம் தருவார். காரணம் தாவீதுக்கு என்ன கிருபை கொடுத்தேனோ அதே கிருபையை நான் உனக்கும் கொடுப்பேன் என்றார். பாவத்தினால், பொல்லாத மனிதர்களால், சாத்தானால் இக்கட்டுகளில் சிக்கித் தவிக்கிற நம்மை தேவன் விடுதலையாக்குவார் எலிகூ யோபுவுக்கு உணர்த்துகிறான்.யோபு: 34:31-34 நான்

தண்டிக்கப்பட்டேன் நான் இனிப் பாவஞ் செய்யமாட்டேன், நான் காணாத காரியத்தை நீர் எனக்குப் போதியும், நான் அநியாயம் பண்ணினேனானால் நான் இனி அப்படிச் செய்வதில்லை என்று தேவனை நோக்கிச் சொல்லத்தகுமே, நீர் அப்படிச் செய்யமாட்டோமென்கிறபடியினால், உம்மோடிருக்கிறவர்களில் ஒருவனை உமக்குப் பதிலாக அதைச் செய்யச் சொல்வீரோ, அல்லவென்றால் நீர் அறிந்திருக்கிறதை சொல்லும் என்றான். தண்டனை வரும் போது இனிப் பாவம் செய்யமாட்டேன். நான் அநியாயம் பண்ணினால் இனி அப்படிச் செய்வதில்லை என்று தேவனை நோக்கி கெஞ்சு, நீர் அப்படி செய்யாமல் உம்மோடிருக்கிற ஒருவர் உமக்குப் பதிலாக செய்யச் சொல்வீரோ? தன் பாவத்தை தான்தான் அறிக்கை செய்யணும் என்று அவன் பேசினான் பின்பு, கர்த்தர் பேசினார் உடனே



உணர்வுள்ளவனாகி தூளிலும், சாம்பலிலும் உட்கார்ந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான். அறிவில்லாமல் ஆலோசனையை அபத்தமாக்கினது நான் தான். அலப்பிட்டேன் என்று தாழ்த்தின உடனே எல்லா இக்கட்டுகளும் மாறிப்போனது. ஒரு இக்கட்டு வந்த உடனே உங்களைத் தாழ்த்தி தேவனிடத்திலேயே ஓடுங்கள்.ஐயோ, நான் ஜெபம் பண்ணிக் கொண்டு தானே இருக்கிறேன், ஏன் எனக்கு இப்படி நடக்குது என்று கேட்காதீங்க. யாத் 5:19-ல் நீங்கள் ஒவ்வொரு நாளிலும் அறுத்துத் தீர வேண்டிய செங்களிலே ஒன்றும் குறைக்கப்படாது என்று சொல்லப்பட்டதினாலே, இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களுக்கு இக்கட்டு வந்தது என்று கண்டார்கள். நீங்கள் சோம்பலாயிருக்கிறீர்கள் அதனால் தான் ஜெபம், ஆராதனை, பலியிட வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். இனி உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்பட மாட்டாது, தினமும் நீங்கள் அறுக்க வேண்டிய செங்கலும் குறைக்கப்பட மாட்டாது என்றதும் ஐயோ நமக்கு இக்கட்டு வந்தது என்று மோசேயோடும், ஆரோனோடும் சண்டை போட்டார்கள். இன்னும் நான் எதில் தவறி விட்டேன் எனக்கு காண்பியும் என்றால் ஆண்டவர் நம்மோடு பேசுவார். அதைக் கேட்காமல் இஸ்ரவேலர் சண்டை பண்ணினார்கள். நம் காரியம் என்ன என்று அதை உணர்ந்து அறிக்கையிட்டு அர்ப்பணியுங்கள். இனி இப்படி செய்ய மாட்டேன் என்று தாழ்த்துங்கள் இரக்கம் பெறுவீர்கள்.

## கர்த்தர் யார்?

அவர் நல்லவர். நாகூம் 1:7 கர்த்தர் நல்லவர். இக்கட்டு நாளிலே அரணான கோட்டை. தம்மை நம்புகிறவர்களைஅறிந்திருக்கிறார். சங் 37:39-ல் நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும். இக்கட்டு காலத்திலே அவரே அவர்கள் அடைக்கலம். சங் 32:7-ல் நீர் எனக்கு மறைவிடமாய் இருக்கிறீர். என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்து கொள்ளும்படி செய்கிறீர். கர்த்தர் நல்லவர், அவர் நமது அடைக்கலம், அவர் நமது மறைவிடம், தம்மை நம்புகிறவர்களை அவர் அறிந்திருக்கிறார். இக்கட்டுக் காலத்திலே அவரே நமது அடைக்கலம். இக்கட்டுகள் சூழ்ந்திருக்கும் போது அவர் அதற்கு நம்மை மறைத்து இரட்சண்யத்தால் பாடல்கள் நம்மை சூழ்ந்து கொள்ளச் செய்கிறார். எனவே மனம் கலங்காதிருங்கள். அவர் நம்மை இந்த இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி காப்பாற்றி மீட்க வல்லவர்.

## நாம் என்ன செய்ய வேண்டும்?

தாவீதைப் போல ஜெபம் பண்ண வேண்டும். சங்கீதம் 141:5-ன் பின் பகுதியில் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன். சங் 60:11-ல் இக்கட்டில் எங்களுக்கு உதவி செய்யும். மனுஷனுடைய உதவி விருதா! என்று சங்கீதக்காரன் ஜெபிக்கிறான். இக்கட்டு அதிகரிக்கும் போது நாம் ஜெபம் பண்ண முடியாமல், அல்லது ஜெபம் பண்ணியும் இன்னும் பிரச்சனை தீர வில்லையே என்று ஜெபம் பண்ணாமல் போகிறோம், ஜெபம் பண்ணுவதை நிறுத்திவிடுகிறோம். ஆனால் இந்த சங்கீதக்காரன் இக்கட்டு நாளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன் என்கிறான். சங் 34:6-ல் இந்த ஏழை கூப்பிட்டான் கர்த்தர் அதைக் கேட்டு அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். சங். 71:20,21-ல் அநேக இக்கட்டுகளையும் ஆபத்துகளையும் காணும்படி செய்த என்னை நீர் திரும்பவும் உயிர்ப்பித்து, திரும்பவும் என்னை பூமியின் பாதாளங்களிலிருந்து ஏறப்பண்ணுவீர். என் மேன்மையைப் பெருகப்பண்ணி என்னை மறுபடியும் தேற்றுவீர். ஏசா 33:2-ல் கர்த்தாவே எங்களுக்கு இரங்கும். உமக்கு காத்திருக்கிறோம். தேவரீர்

காலையில் அவர்கள் புயமும், இக்கட்டு காலத்தில் எங்கள் இரட்சிப்புமாயிரும் என்று ஏசாயா ஜெபிக்கிறார். நெகே 9:36, 37 அதிகாரம் முழுவதும் ஜெபம் தான் பலனையும், நன்மையையும் அனுபவிக்கும் தேசத்திலே தானே நாங்கள் அடிமைகளாயிருக்கிறோம். பின் பகுதியில் வசனம் 37 நாங்கள் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறோம். நெகேமியா தனக்காகவும் தம் ஜனங்களுக்காகவும் உட்கார்ந்து, அழுது, உபவாசித்து ஜெபித்ததைப் பார்க்கிறோம்.. சங் 107:6, 13, 19, 28-ல் இஸ்ரவேலர் தங்கள் ஆபத்திலே கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள், அவர் அவர்களை விடுவித்தார். சங் 25:22 தேவனே இஸ்ரவேலை அவனுடைய எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி மீட்டு விடும் என்கிறான். யோனா 2:2-ல் மீனின் வயிற்றிலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் எனக்கு உத்தரவு அருளினார், நான் பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன். நீர் என் சத்தத்தை கேட்டீர் என்கிறான்.

## நாம் விசுவாசிக்க வேண்டும்

ஆபகூக் 3:16 இக்கட்டு நாளில் இளைப்பாறுதல் அடைவேன். ஆவிக்குரிய யுத்தம் நடக்குது. ஆனாலும் இக்கட்டு நாளில் இளைப்பாறுதல் அடைவேன் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும். சூழ்நிலைகள் நமக்கு எதிர் மறையாகவே இருக்கும். நம்மால் விசுவாசிக்க முடியாததாய் இருக்கும். நான் இந்த இக்கட்டில் இளைப்பாறுதலை பெறுவேன், நன்மையை காண்பேன் என்று நம்பினால் நிச்சயம் நன்மையைக் காண்போம். அப்படி நாம் விசுவாசித்திருக்கும் போது எரே 15:11 தீங்கின்காலத்திலும், நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருக்களுக்கு எதிர்ப்பட்டு உனக்கு சகாயம் செய்வேன் என்று ஆண்டவர் சொல்கிறார். எரே 30:7-ல் யாக்கோபுக்கு இக்கட்டுக் காலம், ஆயினும் அவன் அதிலிருந்து மீள்வான் என்று வேதம் சொல்கிறது. நாமும் எல்லா இக்கட்டிலிருந்தும் மீளுவோம் என்று ஆண்டவர் வாக்குக் கொடுத்திருக்கிறதை விசுவாசித்து ஆசீர்வதிக்கப்படுவோம். என் ஆண்டவர் தாமே இதை வாசிக்கிற உங்கள் வாழ்விலும் ஏற்படுகிற எல்லாவித இக்கட்டுகளிலும், இன்னல்களிலுமிருந்து நீங்கலாக்கி உங்களை மீட்டு இரட்சிப்பாராக!



## முக்கிய அறிவிப்பு !


இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகைக் கடந்த 25 வருடத்திற்க்கு மேலாக அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது. இப்பொழுது பத்திரிக்கை அச்சடிக்கப்படுவதற்க்கு மட்டும் மாதம்தோறும் ரூ 50,000-க்கு மேல் செலவு செய்யப்படுகிறது. இதனால், வருகிற மாதம் முதல் பத்திரிக்கை அச்சடிப்பைக் குறைத்து Digital முறையில் நம்முடைய இணையதளம் www.jesuslives.in/resoruces மற்றும் அனைத்து இயேசு வாழ்கிறார் சமூக வலைத்தளங்களில் வெளிவரும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உங்கள் வாட்சப்பில் மாதந்தோறும் பெற 9442800449 என்ற எண்ணிற்கு "Send Magazine" என Type செய்து அனுப்பினால் மாதந்தோறும் உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும்.





# எழுப்புதல் உபவாச ஜெபம்

## மாதந்தோறும் மூன்றாவது சனிக்கிழமை மதுரையில் நடைபெறும்



கடந்த ஆகஸ்ட் 20 ஆம் தேதி மதுரையில் நடந்த எழுப்புதல் உபவாச ஜெபத்தில் திரளான மக்கள் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச்செல்ல தேவன் உதவி செய்தார். மதுரை பட்டணத்தைப் பற்றி ஆண்டவரின் பாரம் என்ன? இங்கே எழுப்புதல் வர நாம் என்ன செய்ய வேண்டும் என்று சகோ.மோகன்.சி.லாசரஸ் அவர்கள் சொல்லி மதுரைபட்டணத்தின் மனம் திரும்புதலுக்காக பாரத்தோடு ஜெபித்து ஜெபிக்க வைத்தது மிக ஆசீர்வாதத்தை கொண்டு வந்தது. சகோ. வின்செண்ட்ராஜ் அவர்கள் பிந்திவந்தவர்களின் ஆசீர்வாதத்தையும், இக்கடைசி காலத்தில் எழும்புகிறவர் மூலம் கர்த்தர் என்ன செய்வார். என்று அறிவித்து ஜெபித்தது புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியது. பாடல் ஆராதனையை Pr.T.G.சேகர், சுதா சேகர் அவர்களும், ஜெபவேளையை சகோ. கலா வின்செண்ட்ராஜ் நடத்தினார்கள். ஆரம்ப முதல் கடைசிவரை பரிசுத்தஆவியானவரின் ஆளுகை இருந்தது. மக்கள் மன நிம்மதியையும்,நம்பிக்கையும், ஆறுதலையும்,விடுதலையையும் பெற்றுச்சென்றார்கள். ஆண்டவர் இயேசுவுக்கு கனமும், மகிமையும் உண்டாவதாக.













செம்பட்டியில்
செப்டம்பர்
10
@10:00Am
உபவாச
ஜெபம்
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
நேரடி கூடுகை
PHYSICAL GATHERING
Sis.Kala Vincentraj
Bro.L.Vincentraj
ஓசூரில்
ஸ்தோத்திரக் கூடுகை
இடம்
கிறிஸ்துவின் வல்லமை ஜெபக்கூடாரம்
இரயில் நிலையம் பின்புறம், குமரன் நகர்,
ஓசூர்
செப்டம்பர்
18
@10:00Am
Sis.Kala Vincentraj
Bro.L.Vincentraj

# சும்மா

## இருக்கீங்களா? நிற்கிறீங்களா?

சகோதரி. பிரேமா டேவிட்

பதினோராம் மணி வேளையிலும் அவன் போய் சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன? என்று கேட்டான். அதற்கு அவர்கள், ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை என்றார்கள். அவன் அவர்களை நோக்கி, நீங்களும் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள். நியாயமானபடி கூலி பெற்றுக்கொள்வீர்கள் என்றான். மத்தேயு 20:6,7. கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நமக்குள்ளே வல்லமையாய் கிரியை செய்கிற நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். சும்மா என்ற வார்த்தையை தங்கள் உரையாடல்களில் உபயோகிக்காத தமிழ் மக்கள் இருக்கவே மாட்டார்கள். அதிலும் தெரு முனையில், கடை ஓரங்களில் நிற்கிற வாலிபர்களை பார்த்து, என்னப்பா தம்பி என்று கேட்டால் சும்மா...வந்தேன், சும்மா...நிற்கிறேன், சும்மா....பேசிட்டு இருந்தோம், சும்மாத்தான் சொன்னேன், சும்மாதான் இருக்கிறேன் என்று வார்த்தைக்கு வார்த்தை சும்மா என்று சொல்லிப் பழகி விட்டோம். இஸ்ரவேல் ஜனங்களின் பேச்சிலேயும் சும்மா என்ற வார்த்தை இருந்திருக்கிறது. 430 வருஷ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு கானானை நோக்கி இஸ்ரவேல் மக்கள் போய் கொண்டிருக்கும் போது, முன்னாள் செங்கடல், பின்னால் பார்வோன் சேனை துரத்திக்கொண்டு வரும்போது இஸ்ரவேலர் மோசேயைப் பார்த்து, ஏன் எங்களை அழைத்து வந்தீர்? சும்மா எங்களை விட்டு விடும் என்று சொன்னோமே என்று முறுமுறுக்கிறதைப் பார்க்கிறோம். வேதனையிலும், வெறுப்பிலும் நீங்கள் சும்மா நிற்கிறீங்களா? இருந்ததையெல்லாம் இழந்து வெறுமையாய் சும்மா இருக்கீங்களா? உங்களுக்காகவே இந்த நல்ல செய்தி.

### சும்மா இருக்கிற உங்களை இயேசு தள்ளுவதில்லை

ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தில் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். 1 கொரி 1:27,28 என்னிடம் ஒன்றுமேயில்லை, Nothing, எதுவுமேயில்லை, ஒரு வேலையில்லை என்கிறதற்காக வெட்டியாய் சுத்திகிட்டு இருக்கிறவன்னு என்ன பேச்சு பேசுறாங்க, ஒரு தடவை மார்க் குறைஞ்சிடுச்சுனு, இந்த ஒரு தடவை லேட்டாயிருச்சுனு சொன்னா கேட்கவே மாட்டேங்குறாங்களே ஸ்கூல் போக, காலேஜ் போக, வேலைக்குப் போக பிடிக்கலை, பேசவே பிடிக்கலை, வாழவே பிடிக்கலை என்று குமிறிக் கொண்டிருக்கிறீர்களா? ஒன்றும் இல்லாத, பெலவீனமான, ஞானமற்ற உங்களைத்தான் இயேசு நேசிக்கிறார். ஏன் தெரியுமா? வேலை இல்லாம சும்மா கடைத்தெருவில் நின்றவர்களை அதிகாலமே தேடிச் சென்று, ஏன் சும்மா நிற்கிறீங்கன்னு விசாரித்து அவர்களுக்கு வேலையையும், கூலியையும் கொடுத்த எஜமானைப் போல, இயேசுவும் உங்கள் மேல் அன்பு வைத்து, உங்களைத் தெரிந்து கொண்டுள்ளார். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள். 1 பேதுரு 5:7 உங்களுக்கு என்ன இல்லை அதை அவரிடமே சொல்லுங்கள். அவர் இல்லாமையிலிருந்தும் ஒன்றை உருவாக்க வல்லவர். கொஞ்சத்தை பன்மடங்காக பெருகச் செய்ய வல்லவர். ஒன்னும் இல்லையே என்று உலகம் ஒதுக்கினாலும் உங்களுக்காக உயிர் கொடுத்த ஆண்டவர் உங்களையும் உங்கள் வேண்டுதலையும் தள்ளவே மாட்டார். பணத்தை கொட்டி படிக்க வைச்ச அம்மா அப்பா ஏசினாலும், பேசினாலும் படைத்தவர் உங்களை மறக்கமாட்டார். மாற்கு 11:2,3-ல் பாருங்கள் மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியை ஆண்டவருக்கு வேண்டும் என்று அவிழ்த்துக் கொண்டு வரச் சொன்னார். அதின்மேல் வஸ்திரங்களைப் போட்டு அதின்மேல் ஏறிப்போனார்.

ராஜாதி ராஜாவை ஏற்றிச் சென்ற போது அந்த கழுதைக்கு எத்தனை மதிப்பு. உங்களை நேசிக்கிற, எனக்கு நீ வேண்டும் என்கிற இயேசுவை நீங்களும் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு அவரிடம் உங்கள் இயலாமையையும் இல்லாமையையும் சொல்லுங்கள். செல்லுமிடமெல்லாம் அவரை சுமந்து செல்லுங்கள். உங்களுக்கும் உயர்வும், மதிப்பும் உண்டாகும். அதன்பின் நீங்கள் சும்மா வெறுமனே, வெறுமையாய் இருக்கமாட்டீர்கள். ஐயோ, நான் Time waste பண்ணிட்டேனே, fail ஆகிட்டேனே, கிடைச்சதையெல்லாம் ஏதாவது குறை சொல்லி விட்டுட்டேனே என்று கலங்காதீர்கள். உங்களுக்காகவே இப்பவும் Chance கொடுக்க ஆண்டவர் காத்துக் கொண்டிருக்கிறார். 3, 6, 9, 11 ஆம் மணி வேளைகளிலும் வேலையைக் கொடுத்து கூலியைக் கொடுத்த எஜமானனைப் போல நம் ஆண்டவர் எந்தச் சூழ்நிலையிலும் உங்களைத் தள்ளாத ஆண்டவர் உங்களுக்கு வாய்ப்பையும், உயர்வையும் கட்டளையிடுவார். எனவே நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள். சும்மா இருக்கிற உங்களை...இயேசு நேசிக்கிறார்.



## சும்மா இருக்கிறதை இயேசு விரும்புவதில்லை

ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல் வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம்.இப்படிப்பட்டவர்கள் அமைதலோடே வேலை செய்து, தங்கள் சொந்த சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே, அவர்களுக்கு கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம். 1 தெச 3:10 — 12. சும்மா நிற்கிறவர்களைத் தள்ளுவதில்லை, வெறுப்பதில்லை. ஆனால் சும்மா, எந்த முயற்சியும் செய்யாமல், எந்த வேலையும், உதவியும் செய்யாமல் சும்மா...Phone மட்டும் பார்த்துக்கொண்டு சோம்பேறியாய் இருப்பதை அவர் விரும்புவதேயில்லை. வேலையில்லாம சும்மா இருக்கிறீங்களா என விசாரித்த அதே வார்த்தையில் அவருடைய கண்டிப்பும் கட்டளையும் தெரிகிறது. பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன? போங்கள். மிகுந்த சோம்பலினாலே மேல் மச்சுப் பழுதாகும். கைகளின் நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும். பணமோ எல்லாவற்றிக்கும் உதவும். பிர 10:18 சோம்பேறியின் கை வேலை செய்ய சம்மதியாது. நீதி 21:25. ஒரு தகப்பனார் U.G முடித்த தன் பையனை காலை 9 மணிக்கு வெளியே சென்று இரவு 9 மணிக்குள் வீட்டிற்குள்ளாக வந்து விடவேண்டும். மேலும் மேற்படிப்பு படிப்பதற்கான செலவை நீயே பார்த்துக்கொள். ஏதாவது Part time Job தேடிக்கொள் என்று சொன்னதாகச் சொல்லி அப்பதான் பொறுப்பு வரும். பணத்தையும், நேரத்தையும் waste பண்ணமாட்டாங்க என்றார்.இன்றைக்கு பெற்றோர் உங்களிடமிருந்து எதிர்பார்ப்பது பணத்தையல்ல. நீங்கள் பொறுப்பாய், சிறப்பாய் உலகில், தேவசமூகத்தில் உயர்ந்து நிற்க வேண்டும் என்பதே. எனவே அம்மா, அப்பா கிட்ட உங்களுக்கிருக்கிற வருத்தத்தை, கோபத்தை விட்டுவிட்டு, உங்களைத் தள்ளாத, உங்களுக்காக யாவையும் செய்து முடிக்கிற இயேசுவின் துணையுடன் வேலைக்காகப் பிரயாசப்படுங்கள். படிப்பு மற்றும் எல்லாக் காரியங்களிலும் அப்படியே முயற்சி செய்யுங்கள். அதற்க்கேற்ற பலனைப் பெறுவீர்கள். இஸ்ரவேலர் எல்லாரும் மீதியானியர் என்ற எதிரிகளுக்குப் பயந்து ஒளிந்து கொண்டிருந்தபோது பலவீனமான, பயந்த சுபாவமுள்ள கிதியோன் மட்டும் கோதுமையைப் போரடித்துக் கொண்டிருந்தான். சும்மாயிருக்க அவனுக்கு மனது வரவில்லை. கையில் கிடைச்சதையாவது காப்பாற்றி விடவேண்டும். மக்களுக்கு உதவ வேண்டும் என்ற முயற்சியை, வேலையைக் கர்த்தர் கூட இருந்து ஆசீர்வதித்தார். எதிரிகள் கையினின்று மீட்ட தலைவனாய், ஞானத்தோடு செயல்பட்டு வெற்றி பெற்ற வீரனாய் உயர்த்தப்பட்டார். அந்நிய தேசத்தில் அடிமையாய், ஒரு ஆதாரமும் இல்லாமல், ஒன்றுமில்லாமல் சென்ற யோசேப்பு, தானியேல், எஸ்தர் தங்கள் கடமைகளை, பொறுப்புகளை, வேலைகளை உண்மையோடும், உற்சாகத்தோடும் (நீதி31:13) செய்ததினால் உயர்ந்த பதவிகளில் ராஜாக்களோடு அமர்த்தப்பட்டார்கள். நான் வாங்குகிற சம்பளத்திற்கு இதை செஞ்சா போதும், இத என்ன Owner, Boss பார்க்கவா போறார் என்ற எண்ணங்களை மாற்றிக் கொள்ளுங்கள். தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல் ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான். நீதி 22:29. தாலந்து உவமையில் 5, 2 தாலந்து வாங்கினவர்களின் உழைப்பைப் பாராட்டி இன்னும் அதிகமாய்க் கொடுத்து பாராட்டுகிறதைப் பார்க்கிறோம் மத் (25:15 - 30). ஆனால் ஒரு தாலந்து வாங்கினவனோ அதை வைத்து முன்னேற்றத்திற்காக எந்த வேலையும் செய்யாத போது எஜமானனின் கோபத்திற்குள்ளாகி, சோம்பேறியே என்ற பேச்சுடன் உள்ளதையும் இழந்து விடுகிறான். நீங்களும் இந்த நிலையிலிருந்தால் இயேசுவை நம்பி எழும்புங்கள், செயல்படுங்கள். உங்களுக்கு எதிரானவைகளை முறியடிக்கும்படி கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள். (பொறுமையோடும், நம்பிக்கையோடும் இருங்கள்) (யாத் 14:14). அதினதின் காலத்தில் நேர்த்தியாய் செய்கிற ஆண்டவர் தாமே எல்லாவற்றிலும் சுகமாய் வாழச் செய்வாராக!.

# நானும் ஆசிரியராக வேண்டும்

**ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?**

பள்ளியில் நடந்த விழா ஒன்றில் சரண் தன் முன்னாள் ஆசிரியரை சந்தித்தான். அப்போது முன்னாள் மாணவனான சரண் ஆசிரியரிடம் சென்று, சார், என்னை தெரிகிறதா? என்று கேட்டான். ஆசிரியரோ எனக்கு நினைவில் இல்லையே நீயே யார்னு சொல்லுப்பா என்றார். நான் உங்கள் முன்னாள் மாணவன் என்றதும் ஆசிரியருக்கு மிக்க மகிழ்ச்சி. என்ன செய்றீங்க என்று கேட்டார். முன்னாள் மாணவன் நான் ஆசிரியராக இருக்கிறேன் என்றதும் அப்படியா பெரிய மகிழ்ச்சி ஆசிரியராக வேண்டும் என்று உங்களைத் தூண்டியது எது? என்று கேட்டார் ஆசிரியர். என்னுடைய ஆசிரியர் ஒருவரைப் பார்த்து தான் நானும் ஆசிரியராக வேண்டும் என்று விருப்பப்பட்டேன் என்றான். எப்படி? எதைப் பார்த்து எனக்கேட்டார் ஆசிரியர். ஒரு நாள் என்னோடு கூட படிக்கிற பையன் ஒரு விலை அதிகமுள்ள கடிகாரத்தை அணிந்து வந்தான். அது மாதிரி ஒரு வாட்ச் வாங்க எங்களிடம் வசதியில்லை. எனவே அதை எப்படியாவது திருடி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவன் அதைக் கழற்றி பையில் வைத்து விட்டு பாத்ரூம் சென்றதைப் பார்த்த எனக்கு, இதுதான் சமயம் இந்த வாட்சை நாம் எடுத்துக்கொள்ள வேண்டியது தான் என்று எடுத்து என் பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டேன். அவன் வகுப்பறைக்குள் வந்தவுடன் தனது வாட்சை காணவில்லை என்று அறிந்து சிறிது நேரம் தேடிப் பார்த்தான். காணாததால் ஆசிரியரிடம் சொன்னான். ஆசிரியரும் யாராவது எடுத்து இருந்தாலும் அதனைத் திரும்பக் கொடுத்து விடுங்கள் என்றார். மாணவர்களிடமிருந்து எந்த பதிலுமில்லை. எல்லோர் முன்பாக நான் எப்படி திருப்பிக் கொடுக்க முடியும் என்று ரொம்ப சங்கடத்தோடு நான் இருந்தேன். ஆசிரியர் வகுப்பறையின் கதவை மூடச்செய்தார். எல்லோரையும் எழுந்து வரிசையாக நிற்கச்சொன்னார். எனக்கு ரொம்ப பயமா இருந்துச்சு. வெட்கமாகவும் இருந்துச்சு. இப்ப எல்லாரும் கண்களை மூடிக்கொள்ளுங்க. நான் சொல்ற வரைக்கும் யாரும் கண்ணைத் திறக்கக் கூடாதுன்னு சொல்லிட்டார். ஒவ்வொருவரின் பாக்கெட்டுகளிலும் கையை விட்டு பார்த்துக் கொண்டே சென்றார். என்னுடைய பாக்கெட்டுக்குள்ளும் கையை விட்டார் கடிகாரத்தையும் எடுத்துக் கொண்டார். எல்லோரும் கண்களை மூடியிருந்ததால் யாரும் எதையும், என்னையும் பார்க்கவில்லை. முன்னால் சென்ற ஆசிரியர் எல்லோரும் கண்களைத் திறக்கலாம் என்று சொல்லி விட்டு அந்தப் பையனிடம் அந்த வாட்ச்சை கொடுத்து விட்டார். ஆனால் இதுபற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூட கேட்கவுமில்லை, திட்டவுமில்லை. வேறு யாரிடமும் இதுபற்றி சொல்லவேயில்லை. அன்றைக்கு அவர் என் மானத்தைக் காப்பாற்றினார். நானும் அப்பவே திருடும் பழக்கத்தை விட்டொழித்தேன். ஆசிரியரின் அந்த குணம் தான் என்னை ஆசிரியனாக்கியது. எனக்கு ஒரு பாடத்தையும் கற்றுத்தந்தது. ஓர் ஆசிரியர் என்பவர் அனைவருக்கும் தந்தை போன்றவர். "கற்பித்தல்" மட்டுமல்ல பிறருக்கு அதனைத் தன் வழியில் "காட்டுதல்" என்னும் பணியைச் செய்பவர். நானும் நடந்து காட்டி கற்பிக்க வேண்டும் என்று விரும்பினேன் என்றான். இதைக் கேட்டதும் அந்த ஆசிரியர் அற்புதம் என்றார். இப்பவாது நான் யாருனு தெரியுதா என்று கேட்டான் முன்னாள் மாணவன். அப்போதும் அவர், உன்னை சரியாக நினைவுபடுத்த முடியவில்லையே என்றார். சக மாணவனுடைய கடிகாரத்தைத் திருடிய என்னை உங்களுக்கு ஏன் தெரியவில்லை என்றான். ஆசிரியர் கூறினார் நானும் அந்த சமயத்தில் கண்களை மூடிக் கொண்டேதான் ஒவ்வொருடைய பாக்கெட்டாக தடவிப் பார்த்தேன் அதனால் வாட்ச்சை எடுத்தது யாருனு இப்ப நீ சொன்னவுடன் தான் எனக்குத் தெரியுது. ஈஸியாக, இலவசமாக நான் அறிவுரை சொன்னாலும், நான் சொன்னபடி வாழ்ந்து காட்டினதால் தானே இன்று நீ ஆசிரியராக உயர்ந்திருக்கிறாய் அற்புதம் என்றார். அதற்கு அந்த முன்னாள் மாணவன் நானும் உங்களைப் போலவே வாழ்ந்து காட்டிக் கற்பிப்பேன் என்றார். வருங்கால ஆசிரியர்களே, குட்டீ பிள்ளைகளே கதை புரிஞ்சுச்சா! **ok bye**.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா, நல் வழிகாட்டும் ஆசிரியர்களைப் பின்பற்றி நாங்களும் நல்ல மனிதர்களாக, வருங்கால ஆசிரியராக, தலைவராக மாற உதவி செய்யுங்கப்பா. இனி நாங்க பொய்சொல்லாம, பிறர் பொருளை திருடாம இருக்க உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன்

யாக் 1:5

அன்றன்றுள்ள அப்பம்
நடத்தும்



68 வது திருப்பத்தூர்

# பரிசுத்த உபவாச முகாம்

சிறப்பு தேவ செய்தியாளர்கள்:

Ps. L. ஜோசப்
Bro. G.P.S. ராபின்சன்
Bro. C. எபிநேசர் பால்
Bro. L. வின்சென்ட் ராஜ்
Ps. ஆஸ்பார்ன் ஜெபத்துரை



நாள்: 1, 2, 3 செப்டம்பர் 2022

வியாழன் காலை 5 மணிமுதல்
சனிக்கிழமை மதியம் 1 மணிவரை

இடம்: **அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்**
கிறிஸ்துகுல ஆசிரமம்,
திருப்பத்தூர் மாவட்டம், (வேலூர் அருகில்)

ஆயத்த ஜெபம்: ஆகஸ்ட் 31
புதன்கிழமை மாலை 7 மணி

குடும்பமாய் வாருங்கள்,
தேசத்திற்காய் ஜெபிப்போம்: எழுப்புதலைக் காண்போம்!

பதிவுக்கட்டணம்: ரூ. 200/- மட்டும்

தொடர்புக்கு: 98849 08777
90030 67777, 98849 16777

ஜோலார்பேட்டை இரயில் நிலையத்திலிருந்தும்,
திருப்பத்தூர் பேருந்து நிலையத்திலிருந்தும்
கிறிஸ்துகுல ஆசிரமத்திற்கு வாகனங்கள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது!

## ஜெப உதவிக்கு

1800 309 9333

24hr/7

+91 944 28 00 447
+91 944 28 00 449

மின்னஞ்சல்
prayers@jesuslives.in





# கூப்பிடுதலுக்கு மறுஉத்தரவு அருளும் தேவன்

**சாட்சி பகுதி**

## திக்கற்றவர்களை கைவிடாத தேவன்



நான் இலங்கை தேசத்தை சேர்ந்தவள், வேலைக்காக சவுதிஅரேபியாவிற்கு சென்றேன். அங்கு சென்ற பின்பு எனக்கு வேலை சரியாக கிடைக்காத நிலையில் உணவு, மற்றம் என் தேவைகளுக்காக மிகவும் கஷ்டப்பட்டேன். என் செய்வது என்று தெரியாத சூழ்நிலையில் யூடியூப்பில் தங்களது நிகழ்ச்சியைப் பார்த்தேன், எனக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது. உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனக்கு நிரந்தரமான வேலை கிடைக்க ஜெபிக்க கேட்டேன். நீங்களும் எனக்காக ஜெபித்தீர்கள். தேவன் எனக்கு மனம் இரங்கினார், என் வேதனைகளை மாற்றினார், எனக்கு ஒரு நல்ல நிரந்தரமான வேலையை கிடைக்க செய்தார். இயேசப்பாவுக்கு கோடான கோடி நன்றி.சகோதரி. மகேஸ்வரி. சவுதிஅரேபியா

## சுகத்தை தருகிற தெய்வம்



கடந்த சில நாட்களாகவே என் பேரன் சரீர சுகவீனத்தினால் மிகவும் கஷ்டப்பட்டான். இருமல் சளி, காய்ச்சல் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. மருந்து மாத்திரைகள் கொடுத்தும் ஒன்றும் கேட்டவில்லை, இரவெல்லாம் தூங்கமுடியாமல் மிகவும் இருமலினால் கஷ்டப்படுவான். நான் தொலைபேசி வழியாக தங்களைத் தொடர்பு கொண்டு என் பேரனுக்காக ஜெபிக்கச் சொன்னேன், நீங்களும் ஜெபித்தீர்கள், ஜெபித்திற்குப்பின்பு அவனுக்கு காய்ச்சல் நின்று விட்டது, இருமல் இல்லை,. தற்போது நல்ல சுகத்தோடு இருக்கிறான்.தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் சகோதரி. சௌந்தர்யா கோவில்பட்டி

## மனவிருப்பங்களை நிறைவேற்றுகிற தேவன்



என் மகன் சைமனுக்காக ஜெபிக்குமாறு தினமும் ஜெபக்குறிப்பு அனுப்புவேன். அவன் படித்த படிப்பிற்கு ஏற்ற நல்ல நிரந்தரமான வேலையை தேவன் தரும்படியாக தொடர்ந்து ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். நீங்கள் எங்களுக்காக ஜெபித்தீர்கள் தேவன் ஜெபத்தைக் கேட்டு ஒரு கம்பெனியில் நல்ல வேலையை தேவன் தந்தார். நாங்க்ள் கேட்டதற்கு மேலாகவே தேவன் நன்மை செய்திருக்கிறார் ஜெபித்த உங்களுக்கு மிக்க நன்றி.சகோதரி. சிந்தியா கோவை

## தேவனால் எல்லாம் கூடும்



கடந்த மாதத்தில் என் அக்கா கணவர் மருத்துவமனையில் மிகவும் ஆபத்தான நிலையில் ஐ சி யூ-வில் இருந்தார். அவருக்கு இரத்தத்தில் சுகர் அளவு, யூரியா, கிரியாட்டின் அளவுகள் அதிகமானதால் கால்கள் வீக்கமாகிவிட்டது. மருத்துவர்கள் டயாலிஸிஸ் செய்ய வேண்டும். அவர் பிழைப்பது கொஞ்சம் கஷ்டம், நிலமை மோசமாக உள்ளது என்றார்கள். அவர் சுயநினைவு இல்லாதது போல இருந்தார். நான் மருத்துவமனையிலிருந்து தங்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவருக்காக ஜெபிக்க கேட்டேன். நீங்கள் ஜெபித்தீர்கள் தேவன் ஜெபத்தைக் கேட்டு மருத்துவர்களே ஆச்சரியப்படுமாறு சுகர் குறையவும், யூரியா, கிரியாட்டின் அளவு இரத்தத்தில் குறையவும், கால் வீக்கம் குறையவும் தேவ்ன கிருபை செய்து, ஜீவனையும், சுகத்தையும் தந்து வாழ வைத்திருக்கிறார். சுகம் தந்த வாழவைத்த தேவனுக்கு கோடி நன்றி.சகோதரி. ஸ்டெல்லா மும்பை

Jesus Lives MINISTRIES

# School of EVANGELISM

# சுவிசேஷ பயிற்சி பள்ளி

## பயிற்சியைப்பற்றி

- கிறிஸ்துவை அறிந்த அனைவரும் செய்ய வேண்டிய தலையாய கடமை சுவிசேஷம் அறிவிப்பது ஆகும்.
- பயிற்சியின் 6 நாட்களும் தலைசிறந்த சுவிசேஷகர்கள் மற்றும் போதகர்களால் உங்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- தங்குவதற்கு இடம், தினமும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு.



## அக்டோபர்

# 22-27

JOIN NOW »

## நீங்கள் பதிவு செய்ய வேண்டிய வழிமுறைகள்

WEBSITE - soe.jesuslives.in

E-MAIL - soe@jesuslives.in

PHONE - +91 9498000449

# நடப்பு ★★★★★★ செய்திகள்

## பெற்றோர் பராமரிப்பு வயதான தந்தையை பராமரிக்க தவறிய மகனின் சொத்து உரிமைகள் ரத்து

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் கல்லுக்கார தெரு பகுதியை சேர்ந்தவர் சண்முகம் (வயது 72). இவரது மகன் வைத்தியலிங்கம். மனைவியை இழந்த சண்முகம் தனது ஒரே மகனான வைத்தியலிங்கத்தை சிரமப்பட்டு வளர்த்து திருமணம் செய்து வைத்ததாகவும் பின்னர் அவர் மகன், மருமகளுடன் திருநாகேஸ்வரம் கல்லுக்காரத் தெரு பகுதியில் உள்ள தனக்கு சொந்தமான வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் வைத்தியலிங்கம் தனது தந்தை சண்முகத்திடமிருந்து சொத்துக்கள் அனைத்தையும் எழுதி வாங்கிக் கொண்டு தனது தந்தையை முறையாக பராமரிக்காமல் இருந்து வந்ததாக அவர் மேல் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. இது குறித்து திருநீலக்குடி போலீசார் மற்றும் திருவிடைமருதூர் போலீசாரிடம் சண்முகம் புகார் கொடுத்த நிலையில் போலீசார் வைத்தியலிங்கத்திற்கு அறிவுரை கூறி தந்தையை முறையாக பார்த்துக் கொள்ளுமாறு அனுப்பியதாகவும் ஆனாலும் வைத்தியலிங்கம் தொடர்ந்து சண்முகத்தை துன்புறுத்தி அவரை வீட்டை விட்டு வெளியேற்றியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து சண்முகம் கும்பகோணம் கோட்டாட்சியரிடம் புகார் கொடுத்தார். சொத்து ரத்து புகாரின் பேரில், கும்பகோணம் கோட்டாட்சியர் லதா அவர்கள், கும்பகோணம் தாசில்தார் மற்றும் தஞ்சை மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோரிடம் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டார். அதன் பேரில் அவர்கள் மேற்கொண்ட விசாரணையில், வைத்தியலிங்கம் தனது தந்தையின் சொத்துக்களை எழுதி வாங்கிக் கொண்டு அவரை முறையாக பராமரிக்காமல் துன்புறுத்தி வீட்டை விட்டு வெளியேற்றியது உண்மை என தெரிய வந்தது. இதுகுறித்து கோட்டாட்சியரிடம் அறிக்கை தாக்கல் செய்தனர். அந்த அறிக்கையின் அடிப்படையில் சண்முகத்திடம், வைத்தியலிங்கம் எழுதி வாங்கிய உயில் பத்திரத்தை ரத்து செய்து கோட்டாட்சியர் லதா அவர்கள் நடவடிக்கை எடுத்தார். பின்னர் அந்த சொத்தின் ஆவணங்கள் சண்முகத்திடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன

## ஜெபம்

அன்பானவர்களே, முதிர்வயது வரையிலும் நான் உங்களை தாங்குவேன் ஏந்துவேன், சுமப்பேன், தப்புவிப்பேன் என்று ஆண்டவர் நமக்கு வாக்குக் கொடுத்து நம்மை வழிநடத்தி வரும் போது நாமும் நம்முடைய பெற்றோர்களை முதிர்வயதில் பராமரித்து போஷித்து நடத்த வேண்டும். நம் தேசத்தில் உள்ள வயதான தாய் தகப்பன் ஒவ்வொருவருடைய பராமரிப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் நாம் ஊக்கமாய் ஜெபிப்போம்

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார். அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | |
|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST |
| BRANCH | : KOCHADAI MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA |
| A/C.NO | : 493902010001022 |
| IFSC CODE | : UBIN0549398 |

| | |
|---|---|
| A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : MADURAI |
| BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.